


## எல்லா உரிமைகளை விட மேலானது மனித உரிமை : பெ.சண்முகம்

ஜூலை 6, 2025

### பழங்குடி மக்களின் உரிமைப் போராளி ஸ்டேன்சாமி சிலை திறப்பு

திருச்சி, ஜூலை 6 - பழங்குடி மக்களின் உரிமை களுக்காக வாழ்நாள் முழுவதும் போராடிய ஸ்டேன்சாமியின் சிலை திறப்பு விழா மற்றும் ஜனநாயக எழுச்சி மாநாடு சனிக்கிழமை மாலை திருச்சி விரகாலூரில் நடை பெற்றது. மாநாட்டை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி தொடங்கி வைத்து பேசினார்.

ஸ்டேன்சாமி யின் சிலையை நாடாளுமன்ற உறுப் பினர்கள் தொல்.திருமாவளவன் மற் றும் மு.க.கனிமொழி ஆகியோர் திறந்து வைத்தனர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் பெ.சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன், திமுக லால்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சவுந்தரபாண்டியன், கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் இனிகோ. இருதயராஜ் எம் எல் ஏ, மனித உரிமைக்காப்பாளர் கூட்டமைப்பு ஹென்றிடிபேன், திராவிடர் விடுதலைக்கழக தலை வர் கொளத்தூர் மணி, மக்கள் சிவில் உரிமைக்கழகம் தேசிய செய லாளர் ச.பாலமுருகன் மற்றும் ஆயர்கள் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். பழங்குடிகளின் துணைவராக...

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி யின் மாநில செயலாளர் பெ.சண் முகம் தனது உரையில், “விரகலூர் என்ற இந்த சின்னஞ்சிறிய கிரா மத்தில் இருந்து ஏராளமான பாதிரியார்களை அனுப்பி இருக் கிறீர்கள். எல்லாவற்றையும் துறந்து மக்களுக்காக சேவை செய்வ தற்காக தன்னுடைய குழந்தை களை இல்லங்களில் இருந்து பிரித்து அனுப்புவது என்பது அவ்வளவு சுலபமான விஷ யம் அல்ல” என்று கூறினார். “பழங்குடி மக்களுடைய உற்ற துணைவன் தோழர் ஸ்டேன்சாமி, மக்களுக்காக தன்னை அர்ப்ப ணித்துக் கொள்வது என்பது அவ்வ ளவு சுலபமான விஷயம் அல்ல.

அதுவும் தன்னலம் கருதாது மக்களுக் காக முழுமையாக தன்னை அர்ப்ப ணித்துக் கொள்வது என்பதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர் ஸ்டேன்சாமி” என்று பாராட்டினார். ஸ்டேன்சாமியைப் பற்றிய தமிழ் நூல் ஒன்று வெளியாகியுள்ளதாகக் குறிப்பிட்ட பெ.சண்முகம், “ஏற்க னவே டாக்டர் பிரகாஷ்லூயிஸ் என்பவர் ஆங்கிலத்தில் எழுதி, அது, சவுத் விஷன் புத்தக வெளியீட்ட கம் வெளியிட்டிருக்கிற ‘ஸ்டேன் சாமி - பழங்குடி மக்களின் அறப் போராளி’ என்கிற தலைப்பில் ஒரு சிறந்த நூல் தமிழிலேயே வந்தி ருக்கிறது. அவரை முழுமையாக அறிந்து கொள்வதற்கு அவரு டைய வாழ்க்கையை, வாழ்நாளில் அவர் செய்த பணிகளை, வாழ்நா ளில் அவர் அனுபவித்த கொடுமை களை அனைத்தையும் முழுமை யாக தெரிந்து கொள்வதற்கான ஒரு மிகச்சிறந்த நூல். நீங்கள் அனை வரும் வாங்கி வாசிக்க வேண்டும்” என்று பரிந்துரைத்தார். பெருமிதம் “அவர் எப்படி இங்கிருந்து ஜார்கண்ட் மாநிலத்திற்கு சென்று பழங்குடி மக்கள் மத்தியில் பணி யாற்றினாரோ, அதைப்போல் ஏறத்தாழ ஒரு 35 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் ஆதிவாசி மக்களுக்காக பணியாற்றிய ஒரு வன் என்கிற முறையில் என்னுடைய மிக நெருக்கமான ஒரு தோழராக ஸ்டேன்சாமி இருக்கிறார்” என்று பெ.சண்முகம் பெருமையுடன் தெரிவித்தார். “

பழங்குடி மக்களுடைய வாழ்க்கையை உணர்ந்து கொண் டால் தான் அவர்கள் மத்தியிலே பணியாற்ற முடியும். அவர்களு டைய பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, அவர்களுடைய வாழ்க்கைச் சூழலை எல்லாவற்றை யும் அறிந்து கொள்கிற ஒருவரால் தான் அவர்கள் மத்தியில் இரண்டற கலந்து பணியாற்ற முடியும். அத்தகைய ஒருவராக ஸ்டேன்சாமி தன்னுடைய வாழ்நாளில் விளங்கி இருக்கிறார்” என்று குறிப்பிட்டார். பாஜக அரசின் கொடுமை ஸ்டேன்சாமி மீது பாஜக ஆட்சி ஏவிய தாக்குதலை, அநீதியை சுட்டிக் காட்டிய பெ.சண்முகம், “அப்படிப் பட்ட ஒரு மாமனிதரை பாஜக ஆட்சி, ‘அர்பன் நக்ஸலைட்’ என்று முத்திரை குத்தி அவர் உள்ளிட்ட 16 பேரை கைது செய்து சிறையில் அடைத்து பல்லாண்டு காலம் ஜாமீன் என்பதே இல்லாமல் வதைத்தது.

இன்னமும் பலர் பிணை கிடைக்காமல் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். நீதித்துறை உட்பட கருணையற்ற முறையில் நடந்து கொண்டது” என்று விமர்சித்தார். “ஸ்டேன்சாமி ஒரு மிக மோச மான ஒரு நோய்க்கு ஆளாகி தண்ணீர் கூட குடிக்க முடியாத நிலையில் இருந்த போது, உறிஞ்சு குழாய் கொண்ட ஒரு டம்ளரை தருவதற்கு உச்சநீதிமன்றம் வரைக்கும் வழக்கு நடத்தி, அதைக் கூட ஏற்பதற்கு பாஜக அர சும் நீதித்துறையும் மறுத்தது. இத்த கைய அறிவுஜீவிகளை கண்டு ஒன்றிய பாஜக அரசாங்கம் நடு நடுங்கிக் கொண்டிருக்கிறது என்ப தற்கு இந்த வழக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு” என்று விவரித்தார். ஆதிவாசி மக்களின் தற்போதைய நிலை “இந்திய அரசியல்

சாசனம் இந்திய நாட்டு மக்களுக்கு உயிர்வாழ்கின்ற உரிமையை அடிப் படை உரிமையாக்கி இருக்கின்றது.

உயிர்வாழ்வது என்று சொன்னால் ஏதோ மிருகங்களைப் போல வாழ்வது அல்ல. கௌரவமான, சுயமரியாதையுடன் கூடிய ஒரு வாழ்க்கையை மனிதர் வாழ வேண்டும். அத்தகைய வாழ்க்கை கிடைக்காத மக்களுக்காகத்தான் ஸ்டேன்சாமி தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தார்" என்று விளக்கினார். ஆதிவாசி மக்களின் தற்போ தைய நிலையை சுட்டிக்காட்டிய பெ.சண்முகம், "இன்றைக்கும் ஆதிவாசி மக்களுடைய நிலைமை என்பது நில உரிமை, வனவுரிமை இல்லாமல் இருப்பதுதான். அந்த வனங்களில் இருக்கக்கூடிய கனிம வளங்களை பன்னாட்டு கம்பெனி களுக்கும், உள்நாட்டு பெருமுத லாளிகளுக்கும் வாரி வழங்கக் கூடிய வகையில் தான் பல் வேறு சட்டங்களை ஒன்றிய பாஜகஅரசாங்கம் நிறைவேற்றி ஆதிவாசி மக்களை அவர்களுக்கு சொந்தமான பூமியில் இருந்து வெளியேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது" என்று எச்சரித்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேண்டுகோள் "உண்மையிலேயே ஸ்டேன்சாமிக்கு நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினால் அவர் எந்த மக்கள் ஒரு கௌரவமான வாழ்க்கையை வாழ வேண்டும், மற்ற இதர சமுதாய மக்களுக்கு இணையாக முன்னேற்றகரமான ஒரு வாழ்க்கையை ஆதிவாசி மக்களும் வாழ வேண்டும் என்பதற்காக போராடினாரோ, அந்த மக்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகிற போது, அதற்கு எதிராக களம் காண்பது என்பதும், அதற்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும் என்பதும் நம்மை போன்றவர்கள் செய்ய வேண்டிய மிக அடிப்படையான ஒரு வேலை" என்று பெ.சண்முகம் தெரிவித்தார்.

"மனித உரிமை என்பது எல்லாவிதமான உரிமைகளைவிட மேலானது. மனித உரிமைகளை பறிக்கக் கூடிய வகையில் ஒன்றிய ஆட்சியாளர்கள் பீமா கோரேகான் வழக்கிலே பொய் வழக்குகள் புனையப்பட்ட இன்னமும் 6 பேரை பிணையில் விடாமல் சிறையில் வைத்திருக்கிறார்கள். இன்னமும் ஸ்டேன்சாமி மீதான வழக்கு உட்பட நிலுவையில் இருந்து கொண்டிருக்கிறது" என்று கூறினார். அடித்தட்டு மக்களுக்காக பாடுபட்டார் என்பதை தவிர எந்த விதமான குற்றத்தையும் ஸ்டேன்சாமி செய்யவில்லை. ஆனால் சட்டத்தின் முன்னால் அவர் குற்றவாளியாக ஆட்சியாளர்களால் ஆக்கப்பட்டிருக்கிறார். ஆகவே அவரது மரணத்திற்கு பிறகாவது ஸ்டேன்சாமி குற்றமற்றவர், மக்களுக்காக போராடிய மகத்தான போராளி என்கிற பெயரை அவருக்குப் பெற்றுத் தரக்கூடிய வகையில் ஒன்றிய பாஜக அரசாங்கம் ஸ்டேன்சாமி உள்ளிட்டவர்கள் மீது புனையப்பட்ட வழக்கை திரும்பப்பெற வேண்டும்" என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வற்புறுத்தி கேட்டுக்கொண்டார். பெ.சண்முகத்துடன் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் எம்.ஜெயசீலன், திருச்சி புறநகர் மாவட்டச் செயலாளர் சிவராஜன், மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.வெற்றிசெல்வன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சந்திரன், லெனின் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக ஸ்டேன்சாமி மக்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் சந்தனம் வரவேற்றார். முடிவில் விரகலூர் பங்குதந்தை ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

https://theekkathir.in/EPaper#google_vignette